கோரிக்கை எண். 27 கதர் 1981-82.

321 கிராமக் கைத்தொழில்களும் சிறு தொழில்களும்.

I திட்டத்தில் சேராதவை:		ரூபாய்களில்
AA.	கதர் வளர்ச்சிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்-09. உதவி மானியங்கள்.	35,21,000
AB.	தணிக்கைக் கட்டணங்கள் —செலுத்த, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள்.	12,50.000
AD.	கிராமத் தொழில் நிதிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள்.	45,03,000
AF.	பதநீர் இறக்குவோர் துயர் தணிப்பு—மறு வாழ்வுக்காக, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள்,	50,000
II. மாநிலத்திட்டம்:		
JC.	கதர் துணி விற்பனை மீது தள்ளுபடி—09. உதவி மானியங்கள்.	55,00,000
JF.	கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்—09. உதவி மானியங்கள்.	10,62.000
AM.	பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்—	
JA.	பழங்குடி மக்களுக்கு தேனி வளர்க்கும் பெட்டிகள் வழங்கல்—01. சம்பளங்கள்—09. உதவி மானியங்கள்.	5,56,000
III. மத்திய அரசு பொறுப்பேற்றவை:		
SB.	நீலகிரி மாவட்டத்தில் தேனி வளர்ப்பு மேம்பாட்டுக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள்,	75,000
SC.	நீலகிரி மாவட்டத்தில் தைலங்கள் வடிக்கவும் தைலங்கள் வடிக்கும் இயந்திரங்களை வழங்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள்.	15,000
	மொத்தம்	1,65,32,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1981 ஏப்ரல் 26]

இணைப்பு III.

[129ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1981—82 ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறைக் கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் கொள்கை சம்பந்தமான குறிப்பு.

மானியக் கோரிக்கை எண் 37.

பொதுப்பணித்துறை கட்டிடங்கள்.

இக்கோரிக்கை ரூபாய் ஒரு லட்சம் வரையுள்ள மூலப் பணிகள், பொதுப்பணித்துறையின் கீழுள்ள கட்டிடங்களின் பராமரிப்பு மாற்றுப்பணிகள் மற்றும் பழுதுபார்க்கும் செலவினங்கள் அனைத்தையும் கொண்டதாகும். பொதுப்பணித் துறையிலுள்ள கட்டிடங்களுக்கான சொத்து வரி கட்டுதல் ஆகியவையும் இக்கோரிக்கையில் அடங்கும். 1981-82 ஆம் ஆண்டிற்கான இக்கோரிக்கையின் மொத்த ஒதுக்கீடானம் ரூ.283.15 இலட்சங்கள் ஆகும்.

2. மானியக் கோரிக்கை எண். 38.

பொதுப்பணிகள்—பணியாளர்கள் மற்றும் கருவிகள்—இயந்திரத் தளவாடங்கள்.

பொதுப்பணித்துறையின் பணியாளர் அமைப்புக்கு உண்டான செலவினங்கள் இக்கோரிக்கையில் அடங்கும். இதற்கென ஒதுக்கப் பட்டத் தொகை ரூ,1.159.35 இலட்சங்கள் ஆகும்.

3. மானியக்கோரிக்கை எண் 51

பொதுப்பணிகள் கட்டிடங்கள் மீதான மூலதனக் கணக்கு

ஒரு லட்சம் மதிப்பீட்டிற்கு மேல் உள்ள புதிய வேலைகளின் செலவினங்களும், இதுபோன்ற ஒவ்வொன்றும் இவ்வரையறுக்குட் பட்டதாகவும், ஆனால் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மதப்பீடு திட்டத்தின் பகுதிகளில் அடங்கும் வேலைகளின் செலவினங்களும் இக்கோரிக்கையில் இடம் பெறுகின்றன. இதன் கீழ் ரூ.3,336.32 இலட்சம் மானியமாக கோரப்படுகின்றது.

4. மாநில அரசின் நிலவளர்ச்சி உட்பட்ட பல்வேறு துறை களின் தேவைகளுக்கேற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து கட்டி டங்கள் கட்டுவது, பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். மாநில அரசின் கட்டிடங்களை பராமரிக்கும் பணிகளையும் இத்துறை கவனிக்கின்றது,

5. இவைகளுக்கு மேலாக கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் மற்றும் மக்களுக்கு புயல் வெள்ளத்திலிருந்து உடனடி நிவாரணம கொடுப்பதற்காக தற்காப்பு இல்லங்கள் கட்டும் பணிகள் ஆகிய வையும் இக்கட்டிட பிரிவை சார்ந்ததாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. மேலும், உள்ளாட்சித்துறைகள், அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம் ஆகியவற்றிற்கான கட்டிடப் பணிகள் முகமை முறையில் சென்டேஜ் சார்ஜ் வசூலித்துக் கொண்டு, பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவினரால் நிறைவேற்றப்படுகின்றன.

7. அவையில் வைக்கப்பட்ட திறனாய்வுக்குறிப்பில் 1980-81-ம் ஆண்டு இத்துறையினரால், முடிக்கப்பட்டப் பணிகள், நடைபெற்று கொண்டிருக்கும் பணிகள், மேலும் ஒப்புதல் வழங்கப்பட்டு, மேற்கொள்ளவிருக்கும் பணிகள் முதலியன விவரமாகக் காணலாம். 1980-81-ம் ஆண்டு அல்லது முன்னர் துவக்கப்பட்டு, 980-81-ல் முடிக்கப்பட்ட பணிகளின் மதிப்பீடு ரூ. 701.34 இலட்சங்கள். மேலும் ரூ. 2,434.83 இலட்சங்கள் மதிப்புடைய பணிகள் இந்த ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்புதல் ஆணைகள் அளிக்கப்பட்ட ரூ 1882.70 இலட்சங்கள் மதிப்பிட்ட பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன. அவையின் முன்னா வைக்கப்பட்டுள்ள சிறுவெளியீடு 1981-82-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ஒப்புதலுக்குப் பின் தொடங்கப்படவிருக்கும் பணிகள் பற்றிய விவரங்களையும் கொடுக்கின்றது.

8. சென்னை பெருநகர் பகுதியில் உள்ள காலியிடங்களில் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பன்மாடிக்கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட வட்ட தலைமையகங் களிலும் இது போன்ற அலுவலகக் கட்டிடங்கள் கட்டி ஏற்கனவே உள்ள தனி நபர் வாடகை கட்டிடங்களை சொந்தக் கட்டிடங்களில் வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு இடங்களில் குடியிருப்பு வசதிகள், சுற்றுலா மாளிகைகள், ஆய்வு மாளிகைகள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலகக் கட்டிடங் களுக்கு கழிவறை வசதிகள் செய்துதர திட்டமிடப்பட்டு பல்வேறு நிலைகளில் செயல்படுத்த இருக்கிறது. இப்பணிகளுக் காகத் திட்டக் குழுவால் ரூ. .0 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது.

9. இதுவரையில் பராமரிப்பதற்கான வரையறை கட்டிடங் களின் மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அடிப்படை யாக கொண்டிருந்தது. பழமையான கட்டிடங்களின் மூலதன அடக்க விலை குறைவானதால், கட்டிடங்களைப் பராமரிப்பதற் காக அனுமதிக்கப்படும் சதவீதம் மிக சொற்பமாகிறது. ஆதலால் பல கட்டிடங்களை குறைந்த அளவு தேவைகளுக்குக் கூட பராமரிக்க முடிவதில்லை. பழமையான மற்றும் புதிய எல்லாக் கட்டிடங்களையும் பயனுள்ளதாக பராமரிப்பதற்காக புதிய வரை யறைகள் தற்போது பரிசீலனையில் உள்ளன. இந்த வரையறை ஒவ்வொரு கட்டிடப் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டதாக அமையும். கட்டிடங்களின் வயது, வகை ஆகியவைகளின்படி ஒவ்வொரு யூனிட் கட்டிடத்தின் பரப்பளவிற்கு தகுந்தபடி

1981 ஏப்ரல் 16]

மாறுபட்ட மதிப்பீடு இப்புதிய முறையின்கீழ் வகுக்கப்படும். பராமரிப்புப் பணிகள் சில கொள்கைகள் அடிப்படையில் நிறைவேற்றப்படும். இது சம்பந்தமான நிறுவன அமைப்பு மற்றும் செயல்முறை குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

10. பொதுப்பணித்துறையின் வேலைகள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமோ அல்லது நிறுவனங்களிடமோ ஒப்ப அறிவிப்பு மூலம் ஒப்படைக்கப்படுகிறது. தற்போது, இவ்வித ஒப்ப அறிவிப்புகளுக்கு வரும் வரவேற்பு திருப்திகரமாக இல்லை. ஒப்பந்தக்காரர்களிடையே ஒரு சுமுகமான போட்டி மனப்பான்மையை உருவாக்குதல், பட்டப் பொறியாளர்கள் மற்றும் பட்டய பொறியாளர்களை கட்டுமான பணிகளில் ஈடுபடுத்த ஊக்கமளித்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வேலையில்லா பட்ட/பட்டய பொறியாளர்களை உறுப்பினராகக் கொண்ட கட்டுமான கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது. இச்சங்கங்களுக்குச் சில சலுகைகளும் மற்றும் பிணை வைப்புத்தொகை, பாதுகாப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11. மேலும் ஒரு முன்னோடித் திட்டமாக பாளையங்கோட்டை இந்திய மருத்துவ முறைக் கல்லூரியில் தங்கிப் பயிலும் மாணவிகளுக்கென தங்கும் விடுதி கட்டடத்தை பொதுப்பணித்துறையே நேரடியாக மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

12; சென்னை அடையாற்றில் கிரீன்வேஸ் சாலையில் உள்ள அரசிற்கு சொந்தமான காலியிடங்களில் அமைச்சர்களின் குடியிருப்பிற்காக பத்து மாளிகைகள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

13. சென்னை மெரினா கடற்கரையை அபிவிருத்தி செய்யவும் மேலும் அழகு படுத்தவும் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ளவிருக்கிறது:—

(1) கட்டுமரங்களையும் படகுகளையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தவும். மீன் பிடிக்கும் வலைகளை சேர்த்து வைக்கும் பொருட்டு இல்லங்கள் கட்டுதலும்;

(2) பலவகைப்பட்ட மரங்களையும், பூஞ்செடிகளையும் நடுதல்;

(3) சீரணி அரங்கத்திலிருந்து வெளியே வர சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்;

(4) சிற்றுண்டி விடுதி அமைத்தல்;

(5) கல்வி மற்றும் செய்தி படக்காட்சிகளும் மற்றும் கேலிச் சித்திரங்களும் கொண்ட படக்காட்சிகள் காண்பிப்பதற்கு திறந்த வெளி அரங்கம் கட்டுதல்;